தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்
தபால்
24 ஆக 2011
600 006

028678

சுருக்கம்

விளம்பரம் –செய்தி மக்கள் தொடர்புத்துறை –தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் – பல்கலைக் கழகங்கள் –அரசு சார் நிறுவனங்கள் – விளம்பரங்களை நாளிதழ்களில் வெளியிடுகையில் பின்பற்ற வேண்டிய முறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் (ம) செய்தி (விளம்பரம்)த்துறை

அரசாணை(நிலை) எண்.177 நாள்.22.08.2011

படிக்கப்பட்டது.

1) அரசாணை (நிலை) எண்.764, பொது (செமதொ)த் துறை, நாள் 26.3.1980
2) அரசாணை (நிலை) எண்.108, செய்தி மற்றும் சுற்றுலா (விளம்பரத்)த்துறை, நாள். 28.5.1999
3) அரசாணை (நிலை) எண்.392,நிதி (சம்பளங்கள்)த் துறை, நாள் 18.8.2009

---

ஆணை:-

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் அரசின் அனைத்துத் துறைகள், அரசு சார் நிறுவனங்கள் மற்றும் கழகங்களின் ஒப்பந்தப்புள்ளி, அறிவிப்புகள், ஏலம் பொதுவான வெளியீடுகள் போன்ற விளம்பரங்கள் மையப்படுத்தப்பட்டு செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் வழியாக நாளிதழ்களில் வெளியிடப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக் கழகங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு நெசவு உற்பத்தியாளர்கள் சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) ஆகிய துறைகள் நேரடியாக நாளிதழ்களில் விளம்பரங்கள் வெளியிட்டு வருகின்றன.

2) அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பல்கலைக் கழகங்கள், தமிழ்நாடு கூட்டுறவு நெசவு உற்பத்தியாளர்கள் சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) ஆகியவை தங்கள் துறையின் வரைகலை, ஒப்பந்தப்புள்ளி, அறிவிப்புகள் மற்றும் பொது ஏலம் போன்ற அனைத்து வகை விளம்பரங்களையும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் அவர்களின் வழியாக நாளிதழ்களில் விளம்பரம் வெளியிட வேண்டும் என ஆணையிடப்படுகிறது

3) இவ்வாணை நிதித்துறை அ.சா.கு. எண்1460/FS/P/2011, நாள் 29.6.2011 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

4) இவ்வாணை உடனடியாக அமுலுக்கு வருகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தேபேந்திரநாத் சாரங்கி
தலைமைச் செயலாளர்

பெறுநர்
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்,
சென்னை–600 008

த.பி.பா.

-2-



அனைத்து பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்கள்,
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு நெசவு உற்பத்தியாளர்கள் சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்)
பாந்தியன் சாலை, சென்னை – 600 008
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
அனைத்துத் துறைச் செயலாளர்கள், சென்னை –9
அனைத்து அரசுத்துறைத் தலைவர்கள்.
அனைத்து அரசு நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர்கள்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
பதிவாளர், அனைத்துப் பல்கலைக் கழகங்கள்.
பதிவாளர், உயர்நீதிமன்றம், சென்னை –104
ஆணையாளர், அனைத்து மாநகராட்சிகள்.
அனைத்து மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள்.

<u>நகல்:–</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம்,சென்னை–9
அரசு அங்கீகாரப் பட்டியலிலுள்ள அனைத்து விளம்பர நிறுவனங்கள்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

மு.அன்பழகன் 22.8.2011
பிரிவு அலுவலர்.

ம.அ.ப.அ:-

இணை செயலரின் ஆணைப்படி பெற்றுக்கொண்ட அரசாணையின் நகலை, தபால் பிரிவின் மூலம் தேர்வாணையத்தின் அனைத்து பிரிவுகளுக்கும் வழங்கலாம்.

28/8/11

2/9/11